# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## EXTERNAL DEGREE

## PART – III [4th YEAR] EXAMINATION IN

## BACHELOR OF ECONOMICS – 2010/2011

## (PROPER/REPEAT)

## (AUGUST/SEPTEMBER/OCTOBER – 2014)

13 OCT 2014

## EXE - 4063 – ECONOMY AND BANK'S ROLE IN THE ECONOMY

எல்லா வினாக்களுக்கும் விடை தருக	நேரம்: 03 மணித்தியாலம்

1.

(அ) "பொருளாதார அபிவிருத்தியில் வர்த்தக வங்கிகளின் **வகிபாகம் (Role)**" யாது? யுத்தம் முடிவுற்றதன் பின்னரான உள்நாட்டு நிதிச் சந்தையில் இவற்றின் செயலாற்றங்கள் திருப்திகரமானதா? பரிசீலிக்குக. (08 புள்ளிகள்)

ஆ) 1985 ஆம் ஆண்டிற்குப் பின்னர், சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சி நிரலின் கீழ் வர்த்தக வங்கிகள் எதிர் கொண்ட பிரதான **சவால்கள்** யாவை? விளக்குக. (12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

2.

(அ) தேசிய வறுமையொழிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின், **வறியோருக்கான வங்கித்தொழிலிற்** தனியார் வங்கிகளின் நுண்பாக நிதி உதவிப் பங்களிப்பின் முக்கியத்துவம் யாது? (08 புள்ளிகள்)

(ஆ) "1990களின் பின்னர் உள்ளூர்த் தனியார் வங்கிகளினால் அறிமுகப்படுத்தப்பட்ட நுண்பாகக் கொடுகடன்களினை "**வர்த்தகமயமாக்கல்**" எனும் தந்திரோபாயத்தின் மூலம் வறிய பயனாளிகள் பொருளாதார ரீதியில் மேலும் வலுவூட்டப்படுவார்களென எதிர்பார்க்கப்பட்டது". இக்கூற்றினை நீர் ஏற்றுக்கொள்கின்றீரா? கருத்துரைக்குக. (12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

3.

(அ) வங்கிச் செயற்பாடுகள் எவ்வாறு **பங்குச்சந்தை** நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டுள்ளன? உதாரணம் தருக. (08 புள்ளிகள்)

(ஆ) கொழும்புப் பங்குச்சந்தையின் கடந்த 5 ஆண்டுகாலப் **போக்கினை** விமர்சன ரீதியாக மதிப்பிடுக. (12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

4.

(அ) யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் வட கிழக்குப் பிரதேசங்களிற் தொழிலற்ற இளைஞர் மற்றும் யுவதிகளுக்கான **தொழில் வாய்ப்பு உருவாக்கற்** செயற்பாட்டில் இலங்கை மத்திய வங்கி மேற்கொண்ட நடவடிக்கைகளைச் சுருக்கமாக விளக்குக. (08 புள்ளிகள்)

(ஆ) யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் வடகிழக்குப் பிரதேசங்களில் முன்னொருபொழுதுமில்லாதவாறு வங்கி மற்றும் ஏனைய நிதி நிறுவனங்கள் தமது புதிய கிளைகளை விரிவாக்கும் பணிகளிலீடுபட்டுள்ளன. இப்போக்கு மேற்குறிப்பிட்ட செயற்பாட்டில் எந்தளவிற்குத் **தாக்கத்தைச்** செலுத்தும்? ஆராய்க. (12 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

5. பின்வருவனவற்றிற்குக் குறிப்பெழுதுக.

(அ) வலையமைப்பு வங்கித்தொழிலும் உட்கட்டமைப்பு வசதிகளும்.

(ஆ) சேமிப்பிற்கான கேள்வியும் வங்கி ஒதுக்கு வீதமும்.

(இ) திறந்த பொருளாதாரக் கொள்கையும் வங்கிக் கைத்தொழிற்றுறை வளர்ச்சியில் அதன் செல்வாக்கும்.

(உ) இலங்கையில் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் வளர்ச்சியும் அபிவிருத்தி நிதி தொடர்பான சேவைகளில் அவற்றின் பங்கும்.

(04 × 05 = 20 புள்ளிகள்)